

25
காசு

54



# தமிழ்நாட்டுக்
# காசுகள்



## சீனர்

தமிழ் நாட்டில் இருவகை சீனக்காசுகள் கிடைத்திருக்கின்றன. ஒன்று கத்திபோல் வளைந்த தகட்டில் எழுத்துக்களுடனும், மற்றொன்று நடுவில் சதுரமான துளையுடன் கூடிய வட்டவடிவமானதும் ஆகும். இவை கி.பி. 585-ல் ஆண்ட "வூ.சூ" அரசர்களும், கி.பி. 713-முதல் 742 வரை ஆண்ட "கைனன்" அரசரும் வெளியிட்ட காசுகள் ஆகும். சீனத்து அரசன் ஒருவன் பல்லவ மன்னன் இராஜசிம்மன் காலத்தில் நாகப்பட்டினத்தில் பௌத்த விஹாரம் ஒன்று கட்டினான். ஆதலால் இங்கு சீனக்காசுகள் பெருமளவிற்குப் புழக்கத்தில் வந்திருக்க வேண்டும்.

# கத்தரிக்காய் வாங்கினால்!

நமக்கு ஒரு பொருள் தேவையாக இருக்கிறது. வாங்கவேண்டும். எப்படி வாங்குவது? உதாரணமாகக் கத்தரிக்காய் வேண்டும்! நம் கிராமப்புறங்களில் முன்பெல்லாம் என்ன செய்வார்கள் தெரியுமா? வேண்டிய காய்களை வாங்கிக்கொண்டு ஒரு பிடி அரிசி கொடுப்பார்கள். காய்கறிக்காரி வாங்கிக்கொண்டு போய்விடுவாள். காய்கறிக்காரிக்கு அரிசி வேண்டும். வீட்டுக்காரிக்குக் கத்தரிக்காய் வேண்டும். அதனால் தங்களிடமிருந்த பொருளைக் கொடுத்து மற்றவரிடமுள்ள பொருளைப் பெறுவார்கள். இதற்குப் 'பண்ட மாற்று' என்று பெயர் சொல்வார்கள். இப்படித்தான் பண்டைய காலங்களில் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொண்டார்கள்.

ஆனால் காலம் செல்லச்செல்ல இதில் சில கஷ்டங்கள் நேர்ந்தன. உதாரணமாக வெளியூருக்குச் செல்கிறோம். அங்கு ஒரு பொருள் வாங்கவேண்டும். போகுமிடத்துக்கெல்லாம் அரிசியை தூக்கிக்கொண்டு செல்ல முடியுமா. இரண்டாவதாக நமக்கு

ஒரு பொருள் தேவைப்படும். வைத்திருப்ப வர் கொடுக்கலாம். ஆனால் அவருக்கு அரிசி தேவையில்லை. வேறு பொருள் தேவை. அது நம்மிடம் இல்லை. எப்படி வாங்குவது? இந்தக் கஷ்டங்களை தவிர்ப்ப தற்கு ஒரு வழியை கண்டுபிடித்தனர். ஒரு பொருளுக்கு மதிப்புக் கொடுத்தார்கள். அந்த பொருள் எல்லாரும் விரும்பி வாங்கிக்கொள்ளும் பொருளாய் இருக்க வேண்டும். எளிதாக எல்லாரும் எடுத்துச் செல்லக் கூடியதாகவும் இருக்கவேண்டும். பல காலங்கள் ஆனாலும் கெட்டுப்போகாத தாக இருக்கவேண்டும். அதுதான் காசு. அதை முதன் முதலில் எந்த நாட்டில் கண்டுபிடித்தனர்? அது எப்படியெல்லாம் மாறிமாறி வந்திருக்கிறது. ஒவ்வொரு அரசர்களும் எப்படி தமது காசுகளை அச் சிட்டார்கள். அக்காசில் என்ன எழுதி இருந்தது? அது என்ன உலோகத்தால் செய்யப்பட்டது என்றெல்லாம் அறிந்து கொள்ளும் கலைக்கு காசு இயல் (Numismatics) என்று பெயர்.

# காணம்

தமிழ் நாட்டில் பழங் காலத்தில் இருந்தே காசுகள் வழக்கில் இருந்தன. அக்காலத்திய பல காசுகள் பூமிக்கடியில் இருந்து புதையலாகக் கிடைத்திருக்கின்றன. இவற்றில் மிகப் பழமையானவை நீண்ட சதுர வடிவில் உள்ள உலோகத் துண்டுகள். தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோகங்களிலும் இவை உள்ளன. இத்துண்டுகளில் மலை, மயில் போன்ற பல உருவங்களை அச்சாகக் குத்தியிருக்கிறார்கள். இவற்றை 'அச்சுக்குத்திய காசுகள' என்று கூறுவார்கள். இக்காசுகள் இந்தியா முழுவதும் உபயோகத்தில் இருந்தன. வட இந்தியாவில் இக்காசுகளை 'புராண' என்று கூறுவார்கள். தமிழ் நாட்டில் 'காணம்' என்று ஒருவகைக் காசை பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன. காணம் என்பது தான் 'புராணம்' போலும்!



சங்கச் சேரர் காசு

# சங்க காலம்

தமிழ் மக்கள் சுமார் 2000 ஆண்டுகளாகவே (சங்க காலத்திலிருந்தே) காசை உபயோகித்திருக்கிறார்கள். காசு என்றும் காணம் என்றும், பொன் என்றும் கழஞ்சு என்றும் பெயர் வழங்கியிருக்கிறார்கள். சேர மன்னர்கள் புலவர்களைப் போற்றி அவர்களுக்குப் பொற் காசுகள் கொடுத்தார்கள். நார்முடிச்சேரல் என்பவன் காப்பியனாருக்கு நாற்பது நூறாயிரம் 'பொன்' பரிசு கொடுத்தான். ஆடு கோட்பாட்டு சேரலாதன் நச்செள்ளையாருக்கு ஒன்பது 'கா' பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசு கொடுத்தான். செல்வக் கடுங்கோ என்ற சேரன் கபிலருக்கு நூறாயிரம் காணம் பரிசு கொடுத்தான். பல காசுகளைக் கோர்த்து சங்க கால மக்கள் அணிகள் செய்து மகிழ்ந்தனர்.

இடுப்பில் அணியும் "காசு ஒட்டியானம்" இருந்தது. 'கழஞ்சிக்காய்' வடிவில் தங்கத்தை உருட்டி அதையும் காசாக பயன் படுத்தியிருக்கிறார்கள். அதற்கு 'கழஞ்சு' என்று பெயர். இது சுமார் 1500 ஆண்டுகளுக்கு தமிழகத்தில் உபயோகத்திலிருந்தது.




சங்கச் சோழர் காசு

# மூவேந்தர்

சங்க காலத்தில் முடியுடை வேந்தர் மூவர் வெளியிட்ட காசுகளில் அரசரின் பெயரோ, தலையோ பொறிக்கவில்லை. அதனால் அவர்கள் வெளியிட்ட காசுகள் எது என்று நிச்சயமாகத் தெரியவில்லை. காவிரிப்பூம்பட்டினத்தில் சில செப்புக் காசுகள் கிடைத்துள்ளன. சதுரமான அவற்றின் தலைப்புறம் புலி ஒன்று வாலை சுழற்றி நிற்கிறது. பின்புறம் வேலிக்கு நடுவில் ஒரு மரம் இருக்கிறது. இக்காசு சங்ககால சோழர் காசு. மற்றொரு வகைக் காசு அதுவும் சதுரக்காசுதான். வெள்ளியாலோ செம்பாலோ ஆனது. அதில் தலைப்புறம் யானையும் அதன் தலைக்கு மேலே மங்கலச் சின்னங்களும் இருக்கின்றன. பின்புறம் கோடுகள் மீன் போல் உள்ளன. இக்காசுகள் சங்கச்சேரர்களின் காசுகள்.





சேந்தன் காசு

# ஆண்டிபட்டி

வட ஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டம் ஆண்டிபட்டி என்ற இடத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு புதையல் கிடைத்தது. அப்புதையிலில் ஒரு வகை ஈயக் காசுகள் 12)க்கு மேல் இருந்தன. அந்த காசுகளின் தலைப்புறம் நடுவில் இரு கோடுகளும் புள்ளிகளும் உள்ளன. படுக்கவைத்தாற் போல் ஒரு அங்குசம் காணப்படுகிறது. அதைச் சுற்றிலும் கி. பி. 200ஐச் சார்ந்த தமிழ் எழுத்துக்கள் உள்ளன. "தின்னன் எதிரான் சேந்தன் அ" என்று எழுதப்பட்டுள்ளது. தின்னனின் எதிரியான சேந்தனுடையது என்று பொருள் கூறலாம். "எ" என்ற குறில் எழுத்துக்கு இலக்கண மரபுப்படி புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. பின்புறம் மலையையும் ஆற்றையும் குறிப்பது போல் கோடுகள் உள்ளன. ஏறக்குறைய கி. பி. 200ல் சேந்தன் என்ற அரசன் ஆண்டிருக்கிறான். அவன் தன் பெயரைப் பொறித்து காசு வெளியிட்டிருக்கிறான். இது ஈயக்காசு. இதுவே தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள காசுகளில் அரசன் பெயரோடு கிடைத்துள்ள மிகவும் பழங் காசு.

## சதவாஹனர்

கிறிஸ்துவுக்கு 250 ஆண்டுகளுக்கு முன்னர் பிரதிஷ்டானத்தைத் தலைநகராகக் கொண்டு 'சிமுகன்' என்ற மன்னனால் நிறுவப்பட்டது சதவாஹனப் பேரரசு. சுமார் 500 ஆண்டுகள் இப்பேரரசு ஆந்திரம், கர்நாடகம் உள்ளடங்கிய தக்காணத்தைத் தன் குடைக் கீழ் ஆண்டது. தமிழகத்தின் வட எல்லைப்புறம் கூட இப்பேரரசின் ஆட்சியில் இருந்தது. இவ்வரசர்கள் வெளியிட்ட காசுகள் காஞ்சிபுரத்திலிருந்து கடலூர் வரை தமிழ்நாட்டிலும் கிடைத்துள்ளன. வசிட்டிபுத்ர சதகர்ணி, கௌதமி புத்ரசதகர்ணி என்ற அரசர்கள் இவ்வழியில் புகழ் பெற்றவர்கள். இவர்களைத் தமிழ் நூல்கள் நூற்றுவர் கன்னர் என்று அழைக்கும். 'வசிட்டிபுத்ர சதகர்ணி' என்ற மன்னன் ஏறக்குறைய கி.பி. 150-ல் அரியணை ஏறியவன். அவன் வெளியிட்ட ஒரு வகை வெள்ளிக் காசு கிடைத்திருக்கிறது. அதில் தலைப்புறம் அம்மன்னனின் தலை காணப்படுகிறது. அதைச் சுற்றி "ஸிரி சதகணிஸ ரஞோ வசிட்டிபுதஸ" என்று

பிராகிருத மொழியில் உள்ளது. காசின் பின்புறம் நடுவில் ஆறு, மலை, முதலிய மங்கலச் சின்னங்கள் உள்ளன. அதைச் சுற்றிலும் "அரசன்கு வசிட்டி மகண்கு திரு சதகணிகு" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. "ட்" என்ற எழுத்தில் புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆந்திரப் பகுதியில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மன்னன் தமிழ் மொழியையும் தனது காசில் பயன்படுத்தியுள்ளது "திராவிடப் பெரும் பண்புக்கு" சான்று. "அரசனும் வசிட்டி மகனுமான திரு சதகணியினுடையது" என்று பொருள்.



'சதவாஹனர் காசு'





# ரோமானியர்

தமிழ் நாட்டில் சில இடங்களில் ரோமானியக் காசுகள் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை திருச்சி மாவட்டம் கரூரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிடைத்துள்ளன. தங்கக் காசுகளும், வெள்ளிக் காசுகளும், செம்புக் காசுகளும் கிடைத்துள்ளன. இக்காசுகளின் தலைப்புறம், ரோமானிய அரசனின் தலையும் பெயரும் இருக்கும். பின்புறம் எழுத்துக்களும் அந்நாட்டு உருவங்களும் இருக்கும். கி.பி. 15-ல் இருந்து கி.பி. 395 வரை வெளியிடப்பட்ட ரோமானியக் காசுகள் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன.

இவற்றில் அகஸ்டஸ், டைபீரியஸ், கிளாடியஸ், நீரோ, ஆரியஸ், நெர்வா ஆகிய அரசர்களின் காசுகள் முதல் நூற்றுண்டுக் காசுகள். ஹாட்ரியன் மார்க்கஸ் ஆரிலியஸ் என்பவர்களின் காசுகள் இரண்டாம் நூற்ருண்டு காசுகள். தியோடோசியஸ், டியோகிளாடியன் ஆகியோர் காசுகள் நான்காம் நூற்ருண்டுக் காசுகள். ரோமானிய காசுகள் தமிழ் நாட்டுக் காசுகளைவிட மிக அழகானவை. நல்ல உயர்ந்த உலோகத்தால் ஆனவை. இவற்றை டிரக்ம என்று அழைப்பார்கள். தமிழ் நாட்டில் இதை திரம்மம் என்று அழைத்தார்கள். கி.பி. 9-ம் நூற்ருண்டில் கூட (800 ஆண்டுகளுக்கு பிறகு கூட) இக்காசுகளை தமிழ் நாட்டில் செலாவணியாகும் காசாக உபயோகித்திருக்கிருர்கள்.



ரோமானிய காசு

பல்லவர் காசு

# பல்லவர்

பல்லவ மன்னர்கள் தமிழகத்தை, கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டுவரை ஆண்டிருக்கிறார்கள். கலைத் துறையில் ஒப்பற்ற பணியைச் செய்த இம் மன்னர்களுடைய காசுகள் இதுவரையில் சரியாக ஆராயப்படவில்லை. கிடைத்துள்ள காசுகள் பெரும்பாலும் செப்புக் காசுகளாகவே உள்ளன. மெல்லிய தகடுபோல் உள்ள அவற்றின் ஒருபுறத்தில் காளை நின்ற அல்லது கிடந்த நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம். அதைச் சுற்றி கிரந்த எழுத்தில் மன்னனுடைய பெயர் காணப்படும். ஸ்ரீநிதி, ஸ்ரீபரன், மானபரன் என்ற மூன்று பெயர்கள் குறிக்கப்

படுகின்றன. இம்மூன்றிலும் முதல் இரண்டும் கி.பி. 700 முதல் 730 வரை ஆண்ட இராஜசிம்மப் பல்லவனுடைய பட்டப் பெயர்களாகும். எனவே அக் காசுகள் அம்மன்னன் காலத்து வெளி யிடப்பட்டவை எனலாம். மானபரன் என்பது தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் பெயராகும். எழுத்துக்களே இல்லாத காசுகளும் பல உள்ளன. இதுபோன்று காளையை ஒரு புறத்தில் உடைய காசு களின் பின்புறத்தில் பல சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சக்கரம் அசோகமரம், மீன், வில், விளக்கு, சங்கு கவரி, கொற்றக்குடை முதலியன காணப் படுகின்றன. சில காசுகளின் முன்புறம் சிங்கமும், பின்புறம் சங்கமும் காணப்படு கின்றன. ஒரு காசில் பின்புறம் கப்பல் காணப்படுகின்றது. பல்லவர் கடற்படை யில் சிறந்திருந்ததையும், அக்காலத்தில் கடல் வாணிகம் சிறந்திருந்ததையும் இது குறிக்கும்.



பல்லவர் காசு



'மதிராந்தகன் காசு'

# சோழர்

சங்ககாலத்திற்குப் பின்னர் கி.பி. 850இல் விஜயாலயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசை மறுமலர்ச்சி பெறச் செய்தான். அவனுக்குப் பின் ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன் முதலிய சோழ மன்னர்கள் ஆண்டிருக்கின்றனர். ஆயினும் அவர்கள் காலத்திய காசுகள் இது வரை கிடைக்கவில்லை. சோழப் பேரரசர்களில் உத்தம சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகள்தான் இதுவரையில் கிடைத்துள்ள காசுகளில் பழமையான






பாண்டி நாட்டில் 'ஸ்ரீராஜராஜ' காசு

வையாகும். அக்காசுகள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களாலானவை. அவற்றில் மூன்று வகைக் காசுகள் உள்ளன. முதல் வகைக் காசின் முன்புறத்தில் புலி, இரு மீன்கள், வில் ஆகிய மூன்று இலச்சினைகளையும் பின்புறத்தில் உத்தம சோழன் என்ற நாகரி எழுத்துக்களையும் காண்கிறோம். இக்காசுகளே பெருவாரியாகக் கிடைத்துள்ளன. இரண்டாம் வகை புலியும் ஒரு மீனும் உள்ள காசு. இதன் ஓரத்தில் 'மதுராந்தகன்' என்ற தமிழும், கிரந்தமும் கலந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. மூன்றாம் வகைக் காசுகளில் இருபுறமும் புலியும் ஒரு மீனும், சுற்றிலும் 'உத்தம சோழன்' என்ற எழுத்துக்களும் காணப்படுகின்றன.

இராஜராஜன் காலத்தில் முன்புறம் புலி, இரு மீன்கள், வில் ஆகிய மூன்றும், அதன் கீழ் "ஸ்ரீராஜராஜ சோழ" என்ற நாகரி எழுத்துக்களும் உள்ளன. பின்



சோணாட்டில் "ஸ்ரீராஜராஜ" காசு

புறமும் அதே சின்னங்களும், எழுத்துக்களும் உள்ளன. அக்காலத்தில் அச்சிடப் பட்ட மற்றொரு வகை காசில் ஒரு புறத்தில் ஒரு மனிதனுடைய நின்ற உருவமும் மறுபுறம் அமர்ந்த உருவமும் காணப்படுகின்றன. அமர்ந்த மனிதனின் கையின் கீழ் ஸ்ரீராஜராஜன் என்ற நாகரி எழுத்துக்கள் உள்ளன. தமிழ்நாட்டில் இந்தக் காசுகள் ஆயிரக்கணக்கில் இன்றும் கிடைக்கின்றன.

இராஜராஜன் மற்றொரு சிறப்பையும் செய்திருக்கிறான். தான் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் அமர்ந்த மனித உருவமும் ஸ்ரீராஜராஜ என்று நாகரி எழுத்தும் பொறித்தான். இதைப் பொதுவாக வைத்துக்கொண்டான். பின்புறம் நின்ற மனித உருவம். அவன் கையின் கீழே சோழ நாட்டில் வழங்கிய காசில் புலியைப் பொறித்தான். பாண்டி நாட்டில் வழங்கிய காசில் மீனைப் பொறித்தான். கேரளத்தில்

வழங்கிய காசுகளில் திருவடிகளைப்பொறித்தான். இவ்வாறு தான் ஜெயித்த அந்தந்த நாட்டுக்குரிய சின்னங்களைப் பொறித்து வெளியிட்ட பெருமை இராஜராஜ சோழனையே சாரும். ராஜேந்திர சோழன் காலத்திய காசுகளில் புலி, இரு மீன்கள், வில் மூன்றும் முன்னும் பின்னும் உள்ளன. கீழே கங்கைகொண்ட சோழன் என்ற நாகரி எழுத்துக்கள் உள்ளன. சில காசுகளில் ஸ்ரீராஜேந்திர சோழ என்ற நாகரி எழுத்துக்கள் காணப்படுகின்றன.

ஆந்திர பிரதேசத்தில் தவளேச்சுரம் என்ற இடத்தில் பல தங்கக் காசுகள் கிடைத்துள்ளன. அவற்றின் நடுவில் புலி, மீன், வில் சின்னங்களும், சுற்றிலும் கங்கைகொண்ட சோழன் என்ற கிரந்த எழுத்துக்களும் உள்ளன. பின்புறம் குழிவாக எவ்வகை உருவமுமின்றி உள்ளது. இதே போன்று மலைநாடு கொண்ட சோழன் என்ற எழுத்துக்கள் கொண்ட காசுகளும் கிடைத்துள்ளன.

மன்னர் குதிரை மீதேறிச் செல்லும் உருவம் பொறித்த சோழர் காசுகளும் கிடைத்துள்ளன. இவை இராஜாதிராஜன் காலக்காசுகள் எனக் கருதப்படுகின்றன. குழலூதும் பிள்ளையாக, கண்ணனின் உருவம் பொறித்த காசுகளும் அக்காலத்த


வையே. தமிழகத்தில் இராஜராஜன் பெயர் பொறித்த காசுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. சோழர்களின் கல்வெட்டுக்களில் மதுராந்தகன் மாடை, ராஜராஜன் மாடை என்று காசுகளின் பெயர்கள் காணப்படுகின்றன. மாடை என்றால் பொற்காசு என்று பொருள்.

குலோத்துங்கனுடைய காசுகளில் உள்ள "சுங்" என்ற சொல் சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டத்தைக் குறிக்கிறது.



"ஸ்ரீராஜராஜ" காசு





'கச்சி வழங்கும் பெருமாள்'

# பாண்டியர்

சங்க காலத்தில் ஆண்ட பாண்டியர் வெளியிட்ட காசு ஒருவகை மட்டும் கிடைத்துள்ளது. கி.பி. 6-ம் நூற்றாண்டின் இறுதியில் கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் களப்பிரர்களை விரட்டி பாண்டியப் பேரரசை நிறுவினன். அவன் வழி வந்தவர்கள் அனைவரும் ஆற்றல் மிகுந்தவர்கள். சேந்தன், அரிகேசரி, நெடுஞ்சடையன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், வரகுணன், என்று பல மன்னர்கள் ஆண்டனர். அவர்களில் இருவர் வெளியிட்ட காசுகள் கிடைத்திருக்கின்றன. கி.பி. 9-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு அவனீபசேகரன் என்பது பட்டப்பெயர். அவனது காசு ஒன்று உள்ளது. அதில் அவனீபசேகர கோளக




'எல்லாந்தலையான்'

என்று எழுதியுள்ளது. மற்றது அவன் மகன் இரண்டாம் வரகுணன் வெளியிட்ட தங்கக்காசு. அதில் தலைப்புறம் இரண்டு மீன்கள் உள்ளன. பின்புறம் ஸ்ரீவரகுண என்று கிரந்த எழுத்தில் எழுதியிருக்கிறது.

கடுங்கோன் வழிவந்த பாண்டியர்களது ஆட்சி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழர்களால் தோற்கடிக்கப்பட்டது. மீண்டும் 13-ம் நூற்றாண்டில், மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனால் நிலை நிறுத்தப் பட்டது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழர்களை வெற்றிகொண்டு சோணாடு கொண்டான் என்று பட்டம் கொண்டான். அவன் வெளியிட்ட ஒரு காசில் சோணாடு கொண்டான் என்று எழுதப்பட்டுள்ளது. தலைப்புறம் ஒரு நின்ற உருவம் இருக்கிறது. பாண்டியர்களில் மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன்

சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன், வீரபாண்டியன் முதலானோர் புகழ் பெற்றவர்கள். இவர்கள் வெளியிட்ட காசுகளில் தலைப்புறம் இரண்டு மீன்களும் நடுவில் ஒரு செண்டும் இருக்கும் அல்லது நின்ற நிலையில் ஒரு மனித உருவம் இருக்கும். கச்சி வழங்கும் பெருமாள், சுந்தர பாண்டியன், குலசேகரன் அல்லது வீர பாண்டியன் என்று எழுத்துகள் இருக்கும். தலைப்புறம் நின்ற மனித உருவம். பின்புறம் இரண்டு மீன்கள். இவற்றின் இடையில் எல்லாந்தலையானான் என்று எழுத்துள்ளது. இரண்டு மீன்களைப் பல்வேறு நிலைகளில் வைத்து எழுத்து பொறித்திருக்கிறார்கள்.



சேரர் காசு

—►

# சேரர்


திருவாங்கூரைத் தலைநகராகக் கொண்டு சேரர்கள் ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் 'அனந்த பத்மநாபசுவாமியிடம்' மிகுந்த பக்தி பூண்டவர்கள். தங்களைத் 'திருவடி', 'திருப்பாப்பூர் மூத்த திருவடி' என்று அழைத்துக் கொண்டார்கள். இவர்களுடைய காசுகளில் இரண்டு பாதங்கள் (திருவடிகள்) காணப்படும். அதன் கீழ் ஒரு வில்லும் இருக்கும். பின்புறம் 'கலியுக ராமன்' என்று தமிழில் காணப்படும். மற்றொரு காசில் ஒருபுறம் நின்ற மனித உருவமும் பின்புறம் "சேரகுலராமன்" அல்லது "பூதல வீர" என்ற பெயரும் எழுதப்பட்டுள்ளன. பாஸ்கர ரவிவர்மன் என்பவன் வெளியிட்ட காசில் 'பாஸ்கர' என்று எழுதப்பட்டுள்ளது. சிலகாசுகளில் ஒருபுறம் யானையும், அதன் தலையில் "மா" என்ற எழுத்தும் இருக்கும். இது மார்த்தாண்ட வர்மன் என்ற புகழ் பெற்ற அரசன் வெளியிட்ட காசு. இன்னும் சில காசுகளில் ஒருபுறம் 'யானை, வில், பனைமரம் மூன்றும் இருக்கும். இவை சேரர்கள் வெளியிட்ட காசுகள்.



'கிருஷ்ணதேவராயர் காசு'

# விஜயநகரம்

விஜயநகர மன்னர்கள் வெளியிட்ட காசுகள் பல சின்னங்களைத் தாங்கி விளங்குகின்றன. அனேகமாக விஜயநகர வழியில் வந்த எல்லா அரசர்களும் காசுகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஹரிஹரர், தேவராயர் இருவராலும் வெளியிடப்பட்ட தங்கக் காசுகளில் உமா மஹேஸ்வரர் உருவம் காணப்படுகிறது. புக்கர், தேவராயர் இருவராலும் வெளியிடப்பட்ட காசுகளில் திருமால் பிராட்டியர்களுடன் விளங்குவதைக் காணலாம். அச்சுதராயரின் காசுகளில் இரண்டு தலைகளைக் கொண்ட கண்டபேருண்டப் பறவை, தன் அலகுகளால் யானைகளைக் கொத்தி நிற்பதைக் காணலாம். சில காசுகளில் பன்றியையும், சிலவற்றில் கருடன், நடமாடும் கண்ணன் முதலியனவும் காணப்படுகின்றன.



'வீரபிரதாபாச்சுதராய'

விஜயநகர மன்னர்கள் காலத்தில் "ராம டங்கா" என்று அழைக்கப்படும் தங்க அச்சுக்கள் ஏராளமாக வெளியிடப்பட்டன. இவற்றில் ஒருபுறம் ராமரும் சீதையும் அமர்ந்திருப்பதையும், மறுபுறம் அனுமன் நிற்பதையும், நாகரி எழுத்துக்களையும் காணலாம். இவை வழிபாட்டுக்கு ஏற்பட்டவை என்று கருதப்படுகிறது.

முதன் முதலில் விஜயநகரக் காசுகளில் கன்னட எழுத்துக்களில் அரசனின் பெயர் காண்கிறோம். பின்னர் நாகரி எழுத்துக்களிலும் உள்ளன.





மதுரை நாயக்கர் காசு

## தஞ்சை நாயக்கர்

1530-ல் விஜயநகர அரசர் அச்சுததேவ ராயர், தன் மைத்துனி மூர்த்தி அம்மாள் என்பவளை செவ்வப்பநாயக்கர் என்பவருக்கு மணம் செய்து கொடுத்தார். அவளுக்கு சீதனமாகத் தஞ்சாவூர் சீமையை செவ்வப்பனுக்குக் கொடுத்தார். அன்றிலிருந்து தஞ்சாவூர் நாயக்கராட்சி ஏற்பட்டது. செவ்வப்பர், அச்சுதப்ப நாயக்கர், விஜயரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் என்ற நான்கு நாயக்கர்கள் தஞ்சையை ஆண்டனர். செவ்வப்பர் முதலில் கிருஷ்ண தேவராயரின் கீழ் இருந்தார். திருவண்ணு

மலையில் உயர்ந்த கோபுரத்தை எடுத்தவர் இவர். இவர் ஒரு காசு வெளியிட்டிருக்கிறார். அதில் ஒருபுறம் 'சங்கு' உள்ளது மறுபுறம் 'சவப்ப' என்று நாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. விஜயரகுநாத நாயக்கர் வெளியிட்ட காசும் உள்ளது. அதில் ஒருபுறம் ரகுநாத நாயக்கரின் உருவம் உள்ளது. மறுபுறம் இராமர், இலக்ஷ்மணர் ஆகிய உருவங்கள் உள்ளன. ரகுநாத நாயக்கர் சிறந்த ராமபக்தன். கும்பகோணத்தில் ராமர் கோயிலைக் கட்டியவர் இவரே. அக்கோயிலில் ரகுநாத நாயக்கரின் சிலை இருக்கிறது. அதே சிலைபோல் காசிலும் இருக்கிறது.





மதுரைநாயக்கர் காசு

# மதுரை நாயக்கர்

1529-ல் மதுரை நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. கிருஷ்ணதேவராயர் விஸ்வநாத நாயக்கர் என்பவரை மதுரைப் பகுதியை ஆள அமர்த்தினர். அதன்பிறகு 1740 வரை அவர்கள் ஆட்சியிருந்தது. மதுரை நாயக்கர்கள் பாண்டி நாட்டை ஆண்டதால் தங்களைப் 'பாண்டியர்' என்று அழைத்துக் கொண்டனர். இவர்கள் தங்களது காசுகளில் முதலில் பாண்டியர் இலச்சினையான இரு மீன்களை பொறித்தனர். விஸ்வநாத நாயக்கர் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் நின்ற மனித உருவம் இருக்கிறது. பின்புறம் இரண்டு மீன்களும் நடுவில் செண்டும் உள்ளன. அதைச் சுற்றி விஸ்வநாதன் என்று தமிழில் எழுதியிருக்கிறது. வீரப்ப நாயக்கர் என்பவர் 1550-1592 ? வரை ஆண்டவர் அவர் காலத்தில் மதுரைக் கோயிலில் பல கட்டிடங்கள் எடுக்கப்பட்டன. ஆயிரக் கால் மண்டபம் எடுத்தது அவர்தான். அவரது காசுகளில் ஒருபுறம் நின்ற மனித உருவம், பின்புறம் ஒரு மாடு நிற்கிறது. அதன் மேலே சந்திரன். மாட்டின் முன் 'வீ' என்று நாகரியில் இருக்கி

றது. ஒருவகைக் காசில் நின்ற மாடும், பின்புறம் கோடுகளுக்கிடையில் 'தி' என்ற எழுத்தும் உள்ளன. இது 'திருமலை நாயக்கர்' வெளியிட்டதாயிருக்கலாம். ஒருபுறம் லிங்கம், மீனாக்ஷி அம்மன் முதலிய உருவங்கள் பொறித்த காசுகளும் இருக்கின்றன.



புவனேக வீரன் காசு



சமர கோலாகலன் காசு

## வாணர்

தமிழ் நாட்டில் மதுரை ராமநாதபுரம் பகுதிகளில் 'வாணர்கள்' என்ற அரசர்கள் ஆண்டனர். அவர்கள் முதலில் குறுநில அரசர்களாய் இருந்து 14-15 நூற்றூண்டுகளில் தனி உரிமை பெற்று ஆட்சி செய்யத் தொடங்கினர். அவர்களுக்கு அழகர்மலைப் பெருமாளிடம் சிறந்த பக்தி 'திருமாலிருஞ் சோலை நின்ருன் மாபலி வாணுதராயன்' என்று பட்டம் சூட்டிக் கொண்டனர். இவர்கள் காசுகளில் ஒருபுறம் இவர்களது கொடியான 'கருடன்' இருக்கும். மறுபுறம் 'புவனேகவீரன்', 'சமர கோலாகலன்' என்ற பெயர்கள் தமிழில் எழுதப்பட்டிருக்கும்.

# ஹாலந்து

ஹாலந்து(டச்சு)க்காரர்கள் கி.பி. 17-ஆம் நூற்றுண்டில், கிழக்கிந்தியக் கரையில் நாகப்பட்டினம், புழற்காடு முதலிய இடங்களில் வாணிக நிலையங்களை அமைத்திருந்தனர். "டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி" என்பது அவற்றின் பெயராய் இருந்தது. ஆங்கிலேயரின் வெற்றியால் டச்சுக்காரர்கள் அதிக செல்வாக்கைப் பெறவியலவில்லை. அவர்கள் வெளியிட்டுள்ள பல காசுகள் அவர்களுடைய பகுதியில் செலாவணிக்காக அச்சிடப்பட்டவை. தமிழகத்தின் பல பகுதிகளில் அவை இன்றும் கிடைப்பதைக் காணலாம். அவற்றின் முன்புறம் பெரும்பாலும் (V.O.C.) வி.ஓ.சி என்ற ஆங்கில எழுத்துக்கள் காணப்படும். இது அவர்களுடைய கம்பெனியின் பெயரைக் குறிக்கும், பின்புறம் டச்சு இலச்சினைகளான இரண்டு சிங்கங்கள் பல நிலைகளில் இருப்பதைக் காணலாம். இவற்றை 'நாகூர் சல்லிகள்' என்றும் குறிப்பர். இது போன்று அரைச் சல்லிகளையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர்.

டசசுக்காரர்களுடைய புழற்காடு (Pulicut) நிலையம் அச்சிட்ட காசுகளில் "பி" (P) என்ற ஆங்கில எழுத்தும், நாகப்பட்டினத்தில் அச்சிட்ட காசுகளில் "என்" (N) என்ற எழுத்தும் காணப்படும்.

ஹாலந்துக்காரர்கள் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் காசுகளை வெளியிட்டனர். விஜயநகரக் காசுகளைப் பின்பற்றி தங்கக் காசுகளில் திருமாலின் உருவையும் இவர்கள் பொறித்துள்ளது அறிந்து மகிழத்தக்கது.




சமர கோலாகலன் காசு

# டேனிஷ்

தஞ்சையை ஆண்ட நாயக்கப் பெருமன்னர் விஜய ரகுநாத நாயக்கர் கி.பி. 1620-ல் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியார் தம் நாட்டில் வாணிகம் செய்ய அனுமதி அளித்தார். அந்த கம்பெனி தரங்கம்பாடியில் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு வியாபாரம் செய்து வந்தது. அப்போது டேனிஷ் நாட்டை ஆண்ட அரசர் நான்காம் கிறிஸ்டியன் என்பவர். டேனிஷ் அரசர்கள் கிறிஸ்டியன் என்றும் 'பிரடிரிக்' என்றும் மாற்றி மாற்றி பெயர் வைத்துக் கொண்டனர். அவர்கள் தமிழ் நாட்டில் வாணிகத்துக்காகப் பல காசுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் காசுகளில் C4, C5, C6, F3, F4, என்ற எழுத்துக்கள் இருக்கும் C4 என்றால் கிறிஸ்டியன் 4 என்றும் F3 என்றால் பிரடிரிக் 3 என்றும் பொருள். இவர்கள், தரங்கம்பாடியில் 'டேன்ஸ் பொர்க்' என்ற கோட்டை கட்டினார்கள். ஆதலால் அக்கோட்டையின் உருவத்தை தங்கள் காசுகளில் பொறித்ததோடு 'டேன்ஸ்பொர்க்' என்ற பெயர் பொறித்தும் DANSBORG காசு வெளியிட்

டிருக்கிறார்கள். இதை சுருக்கி D.B. அல்லது T.B. என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி என்று குறுக்கி 'DOC' என்ற எழுத்து பொறித்த காசுகளும் வெளியிட்டிருக்கிறார்கள். பத்துகாசுகள், நாலு காசுகள், இரண்டு காசுகள் என்ற வகையில் காசுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.



பிற்கால சேரர் காசு

# பிரெஞ்சு

ஆங்கிலேயர்களைப் போலப் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வாணிக நோக்குடன் கம்பெனிகளை நிறுவினர். அவர்களுடைய முக்கியத் தலமாக பாண்டிச்சேரி திகழ்ந்தது. 'வராகன்' என்ற தங்கக் காசு அக்காலத்தில் வழக்கிலிருந்தது. இதில் திருமால், பூமகளுடனும், திருமகளுடனும் நிற்கும் உருவம் இருக்கும். பிரெஞ்சுக்காரர்கள் முதலில் இக்காசுகளை அச்சிட்டனர். கிறிஸ்துவப் பாதிரிமார்கள் அதை விரும்பவில்லை. எனினும் அதனல் ஏற்படும் லாபத்தைக் கருதி பாரிஸ் நகரிலிருந்த கம்பெனியின் தலைமையகம் அதை அனுமதித்தது. அதன் பின்னர் தாங்கள் பிடித்த இடங்களின் செலாவணிக்காக அக்காசுகளை அச்சடித்து பரப்பினர். பிரெஞ்சுக்காரர்கள் வெளியிட்ட காசுகள் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய மூன்று உலோகங்களாலானவை. தங்க நாணயத்தைப் "பகோடா" என்றும், வெள்ளி நாணயத்தைப் 'பணம்' என்றும், செம்பு நாணயத்தைக் "காசு" என்றும் குறிப்பர். தங்கப் பகோடாவில் கடவுளின் உருவம் இருந்தது. வெள்ளிப்

பணத்தில் மூவிதழ்கள் ஒருபுறமும், "பாண்டிச்சேரி 1700" என்ற எழுத்துக்கள் மறுபுறமும் இருந்தன. சிலவற்றில் குறுக்குக்கோடுகளும், நடுவில் மூவிதழ்களும் பொறிக்கப்பட்டன. செப்புக் காசுகள் மூன்று வகையில் அச்சிடப்பட்டன. 1. ஒருபுறம் "புதுச்சேரி" என்ற தமிழ்ப் பெயரும்; மறுபுறம் மூவிதழ்களும் இருக்கும். 2. ஒருபுறம் சேவலும், ஆண்டும் (1856) குறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம் மூவிதழ்களும் இருக்கும். 3. முன்புறம் நாகப்பட்டினம் என்றும், பின்புறம் புதுச்சேரி என்றும் எழுதப்பட்டிருக்கும். இன்னும் வேறு சிலவகைக் காசுகளும் இவர்களால் அச்சிடப்பட்டன.




கங்கர் காசு


# ஆங்கிலேயர்

இங்கிலீசுகாரர்கள் கி.பி. 1600-ல் தமிழ் நாட்டுக்கு வியாபாரம் செய்ய வந்தார்கள். சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டி இங்கிலீசு கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் வியாபாரம் செய்தார்கள். தங்களது வியாபாரத்துக்காக இவர்கள் பல காசுகள் வெளியிட்டார்கள். விஜயநகர அரசர்களின் தங்கக் காசுக்கு அப்பொழுது 'வராகன்' என்று பெயர். அதனால் இங் கிலீசு தங்கக் காசுகளுக்கும் 'வராகன்' என்று பெயர். இந்துக் கோயில்களை இவர்கள் பகோடா என்று அழைப் பார்கள். அதனால் வராகன் காசுகளை 'பகோடா' என்றும் குறித்தார்கள். இதில் இந்து தெய்வங்களின் உருவங்கள் இருக் கும். இவற்றில் ஒரு வகைக் காசுகளில் நக்ஷத்திரக்குறி இருக்கும். அதை (Star Pagoda) நக்ஷத்திர பகோடா என்று அழைத்தார்கள். இதுதான் முதலில் இங் கிலீசுகாரர்கள் பயன்படுத்திய முக்கிய காசு. இது கும்பினிவராஹன் அல்லது புள்ளிவராஹன் என்று பெயர் பெற் றது. வெள்ளியில் இவர்கள் வெளியிட்ட

காசுகளுக்கு ரூபாய் என்று பெயர். ஒரு தங்க வராகனுக்கு 3 1/2 வெள்ளி ரூபாய் இவர்கள் செம்பில் 40 காசு, 20 காசு, 10 காசு, 5 காசு, 2 1/2 காசு என்றெல்லாம் வெளியிட்டார்கள். முதலில் பம்பாயில் வேறு வகை, வங்காளத்தில் வேறு வகை, தமிழ் நாட்டில் வேறு காசுகள் புழக்கத்திலிருந்தன. அதனால் 1835-ல் இந்தியா முழுவதும் ஒரே வகைக் காசு செல்லத்தக்கவாறு தங்க வராகன் வெளியிடுவதை நிறுத்தி வெள்ளி ரூபாய் மட்டும் வெளியிட்டார்கள். சென்னையில் காசு வெளியிட்ட இடம் தான் தங்கச்சாலை என்று பெயர் பெற்றது. அதை (Mint) 'மின்ட்' என்பார்கள்.



விக்ரம பாண்டியன் காசு



## சீனர்

தமிழ் நாட்டில் இருவகை சீனக்காசுகள் கிடைத்திருக்கின்றன. ஒன்று கத்திபோல் வளைந்த தகட்டில் எழுத்துக்களுடனும், மற்றொன்று நடுவில் சதுரமான துளையுடன் கூடிய வட்டவடிவமானதும் ஆகும். இவை கி.பி. 585-ல் ஆண்ட "வூ.சூ" அரசர்களும், கி.பி. 713-முதல் 742 வரை ஆண்ட "கைனன்" அரசரும் வெளியிட்ட காசுகள் ஆகும். சீனத்து அரசன் ஒருவன் பல்லவ மன்னன் இராஜசிம்மன் காலத்தில் நாகப் பட்டினத்தில் பௌத்த விஹாரம் ஒன்று கட்டினான். ஆதலால் இங்கு சீனக்காசுகள் பெருமளவிற்குப் புழக்கத்தில் வந்திருக்க வேண்டும்.